## மதுரவாயல் வடக்குப் பகுதி விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் தயாநிதி பிரபு - சாருமதி திருமணம்!

# மணமக்கள் - நம் தமிழ்நாட்டின் இருமொழிக் கொள்கை போல வாழ்க!

## துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வாழ்த்துரை!



**சென்னை, மார்ச் 11–**

**சென்னை, தெற்கு மாவட்டம் மதுரவாயல் வடக்குப் பகுதி விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் தயாநிதி பிரபு – சாருமதி இணையரின் திருமணத்தை குறிஞ்சியில் நேற்று முன்தினம் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நடத்தி வைத்தார்.**

**அப்போது அவர் மணமக்கள் இருவரும் வாழ்வில் எல்லா வளமும் பெற்று நீடூழி வாழ்கவென வாழ்த்திப் பேசினார்.**

**துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய வாழ்த்துரை வருமாறு:**

சென்னை தெற்கு மாவட்டம், மதுரவாயல் வடக்குப் பகுதி விளையாட்டு மேம்பாட்டு அணியின் அமைப்பாளர் தயாநிதி பிரபு - சாருமதி ஆகியோரின் திருமணத்தை உங்கள் முன்னிலையில் நடத்தி வைப்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். இந்தத் திருமணம் நம் கழகக் குடும்பங்களுக்கு உரிய வகையில் சிறப்பான சுயமரியாதைத் திருமணமாக நடைபெற்றுள்ளது.

கழகத்தில் இருக்கின்ற ஒவ்வொரு குடும்பமுமே முத்தமிழறிஞர் கலைஞரின் குடும்பம்தான். ஆகவேதான் நம் குடும்பத்தில் நடக்கின்ற திருமணமாக, அந்த உணர்வோடு இந்தத் திருமணத்தைப் பார்க்கிறேன்.

**பல ஆண்டுகாலம் உழைத்தவர்**

தம்பி தயாநிதி பிரபு அவர்கள் வழி வழியாக, நம் இயக்கத்திற்காக உழைக்கின்ற கழகக் குடும்பத்தைச் சேர்ந்தவர். தயாநிதி பிரபு அவர்களின் தந்தையார் பொன் பிரபு, புனிதா ஆகியோரின் திருமணத்தை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் நடத்தி வைத்தார். பிரபு அவர்களின் திருமணத்தை நடத்தி வைக்கின்ற வாய்ப்பை நான் பெற்றிருக்கிறேன். தம்பி தயாநிதி பிரபு அவர்களின் தந்தையார் பொன் பிரபு அவர்கள் கழகத்திற்காகப் பல ஆண்டுகாலம் உழைத்தவர். கலைஞரின் அன்பையும், நம்பிக்கையையும் பெற்று, கழகத் தலைவரின் அன்பையும் பெற்று இன்றைக்கு திருவேற்காடு நகர் மன்ற உறுப்பினராக சிறப்பாகப் பணியாற்றுகிறார்.

**உதயசூரியன் என்று பெயர்**

மணமகன் அவர்களின் தாய்மாமாவுக்கு பேரறிஞர் அண்ணா அவர்கள்தான் உதயசூரியன் என்று பெயர் வைத்திருக்கிறார். இப்பொழுது கழகச் செயலாளராக இருக்கும் இன்னொரு தாய்மாமன் அவர்களின் பெயர் அண்ணாதாசன். இப்படி கழகத்தின் மீதும், நம் கொள்கையின் மீதும் பெரிய பற்றினைக் கொண்ட குடும்பம்தான் தம்பி தயாநிதி பிரபு அவர்களின் குடும்பம். தன் தாத்தா, தந்தையார் வழியில் தம்பி தயாநிதி பிரபு கழகத்திற்காக உழைத்துக் கொண்டு இருக்கிறார். இன்னும் அதிகமாக உழைப்பார் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

**வெற்றியே இலக்கு!**

அவர் உழைப்பை அங்கீகரிக்கும் விதமாகத்தான் நம் கழகத் தலைவர் அவர்கள் அவருக்கு விளையாட்டு மேம்பாட்டு அணியின் மதுரவாயில் வடக்குப் பகுதி அமைப்பாளராக நியமித்து அழகு பார்த்து இருக்கிறார். உங்கள் உழைப்புக்கு ஏற்ற அங்கீகாரத்தை நம் தலைவர் நிச்சயம் விரைவில் வழங்குவார் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

**2026 வெற்றியே இலக்கு!**

இது திருமண விழா என்றாலும், வர இருக்கின்ற 2026 சட்டமன்றத் தேர்தல் எவ்வளவு முக்கியம் என்பது உங்களுக்கே தெரியும். அதை நான் சொல்லத் தேவையில்லை. கடந்த நான்கு ஆண்டுகளாக சிறப்பான ஆட்சியை, குறிப்பாக மகளிருக்கான ஆட்சியை நம் முதலமைச்சர் அவர்கள் வழங்கிக் கொண்டிருக்கிறார். ஆட்சிப்பொறுப்பு ஏற்றதில் இருந்து, ஒவ்வொரு நாளும் மகளிருக்கு என்ன தேவையோ அதை செய்து கொண்டிருக்கிறார்.

அவர் இட்ட முதல் கையெழுத்து மகளிருகான விடியல் பயணம் திட்டம். அதேபோல் பெண்கள் படிக்க வேண்டும் என்பதற்காக புதுமைப்பெண் திட்டம் வாயிலாக, அரசுப் பள்ளியில் படித்து கல்லூரி செல்லும் மாணவியருக்கு மாதம் ஆயிரம் ரூபாய் ஊக்கத்தொகை வழங்கப்படுகிறது. பள்ளிக் குழந்தைகளுக்கு முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம், குடும்பப் பெண்களுக்கு கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டம் என்று ஒவ்வொரு திட்டமாக நம் தலைவர் மகளிருக்காக பார்த்துப் பார்த்துத் தீட்டியுள்ளார்.

**பிரச்சாரப் பணி**

எனவே உங்களிடத்தில் நான் கேட்டுக் கொள்வதெல்லாம், ஏதோ திருமணத்திற்கு வந்தோம், மணமக்களை வாழ்த்தினோம் என்று இல்லாமல் அடுத்து வருகின்ற சட்டமன்றத் தேர்தலையும் மனதில் வைத்துக்கொண்டு இன்றிலிருந்து உங்களின் கழகப் பணியையும், பிரச்சாரப் பணியையும் மக்களிடத்தில் எடுத்துச் செல்ல வேண்டும். அதேபோல் மணமக்களுக்கு எல்லா திருமணத்திலும் சொல்கின்ற ஒரு வேண்டுகோள்தான். தயவுசெய்து உங்களுக்கு பிறக்கின்ற குழந்தை, அது ஆண் குழந்தையாக இருந்தாலும் சரி, பெண் குழந்தையாக இருந்தாலும் சரி அழகான ஒரு தமிழ்ப் பெயரைச் சூட்டுங்கள் என்று உங்கள் அனைவரின் சார்பாக கேட்டுக்கொள்கிறேன்.

**பெரியாரும் – பகுத்தறிவும் போல!**

மணமக்கள் இருவரும் நம் தமிழ்நாட்டின் இருமொழிக் கொள்கை போல, பெரியாரும் பகுத்தறிவும் போல, அண்ணாவும் மாநில சுயாட்சியும் போல, கலைஞரும் தி.மு.க.வும் போல, நமது தலைவரும் உழைப்பும் போல பல்லாண்டு வாழ்க... வாழ்க... என வாழ்த்தி வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

இவ்வாறு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வாழ்த்திப் பேசினார்.

இதில் அமைச்சர் மா.சுப்பிரமணியன், சட்டமன்ற உறுப்பினர் காரப்பாக்கம் கணபதி, மாவட்ட இளைஞரணி அமைப்பாளரும் சட்டமன்ற உறுப்பினருமான ஏ.எம்.வி. பிரபாகர் ராஜா உள்ளிட்ட கழக முன்னணியினர் பலரும் கலந்து கொண்டனர்.

---

### முதல்வர் பிறந்த நாள் விழா! சேலம் கிழக்கு மாவட்டம் —

## அயோத்தியாபட்டணம் தெற்கு ஒன்றியத்தில் மாபெரும் கிரிக்கெட் போட்டி!

### எஸ்.ஆர்.சிவலிங்கம் பரிசு வழங்கினார்! ஏ.விஜயகுமார் ஏற்பாட்டில்!

சேலம், மார்ச். 11-

கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு சேலம் கிழக்கு அயோத்தியாப்பட்டணம் தெற்கு ஒன்றியம் சுக்கம்பட்டியில் ஒன்றிய செயலாளர் ஏ. விஜயகுமார் ஏற்பாட்டில் மாபெரும் கிரிக்கெட் போட்டி நடைபெற்றது. இதில் சிறப்பு அழைப்பாளராக கிழக்கு மாவட்டச் செயலாளர் எஸ்.ஆர். சிவலிங்கம் கலந்து கொண்டு போட்டியை துவக்கி வைத்தார்.

இதில் வெற்றி பெற்ற அணிகளுக்கு முதல் பரிசு 25,000 , இரண்டாம் பரிசு 15,000, மூன்றாம் பரிசு 10,000, நான்காம் பரிசு 6000 மற்றும் கோப்பைகளை வழங்கினார்.

இதில் மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் ஏ.ஏ. ஆறுமுகம், மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் ப்ரண்ட்ஸ் ரமேஷ், முன்னாள் ஒன்றிய குழு துணை தலைவர் ஏ.செந்தில்குமார் ,மாவட்ட பிரதிநிதி அகரம் ராஜேந்திரன், ஒன்றிய துணைச் செயலாளர் காந்திமதி சின்னச்சாமி, மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் பாரதி, பேரூராட்சி செயலாளரும் பேரூராட்சி தலைவர் செல்வராஜ், பேரூராட்சி துணைத்தலைவர் செல்வ சூரியா சேதுபதி,

மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் நடராஜ், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர்கள் முருகன், நாகராஜ், கங்கா ரமேஷ், சுப்பிரமணி செல்வி, சக்திவேல், செல்வரசி, பழனிவேல், ஒன்றிய விளை யாட்டு அணி அமைப்பாளர் கண்ணன், துணை, அமைப்பாளர் முருகன், சந்தோஷ், முன்னாள் ஒன்றிய குழு உறுப்பினர் பிரீத்தி மோகன், ஊராட்சி மன்றதுணைத் தலைவர் ராஜா, மாவட்ட பொறியாளர் அணி துணை அமைப்பாளர் தர்மசாஸ்தா, கிளை கழக செயலாளர்கள் மோகன்ராஜ், முத்துக்குமார், கார்த்திகேயன், ராகுல், வெங்கடாஜலம், ராஜேந்திரன், தமிழ் செல்வன், உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

போட்டி முடிவில் அனைத்து அணி வீரர்களுக்கும் நினைவு பரிசு வழங்கப்பட்டது.



அரியலூர் மாவட்டம், அரியலூர் நகராட்சியில் புதியதாக கட்டப்பட்டு வரும் பேருந்து நிலையத்தின் கட்டுமானப் பணிகளை போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் பொ.இரத்தினசாமி, அரியலூர் சட்டமன்ற உறுப்பினர் கு.சின்னப்பா மற்றும் பலர் உள்ளனர்.

---

### சிதம்பரம் நகரக் கழக அவைத் தலைவர்

## பி.எஸ்.ராஜராஜன் மறைவு!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, மார்ச். 11–

சிதம்பரம் நகர க் கழக அவைத் தலைவர், முன்னாள் நகர் மன்ற உறுப்பினர், எண்ணெய் கடை ராஜா (எ) பி.எஸ்.ராஜராஜன் அவர்கள், 07.03.2025 அன்று இரவு 10:00 மணியளவில் இயற்கை எய்தினார் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

மறைவுச் செய்தியறிந்த முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமது ஆழ்ந்த இரங்கலை அன்னாரின் குடும்பத்தினருக்கு தெரிவித்துள்ளார்.

